**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**<u>OS 139/2021</u>**

02.09.2025

## <u>PW- 1</u>

**<u>வா.சா.1. மகேந்திரன், த/பெ. திருநாவுக்கரசு அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**:

இந்த தாவா சொத்து தொடர்பாக நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதியின் பெயரில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் - சரிதான். அந்த வழக்கின் வழக்குரை தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் - சரிதான். **அ.வா.எண். 21/2021 ன் வழக்குரை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும்**. அந்த வழக்கில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்னர் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் - சரிதான். அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் ஒரு சுவர் தான் பிரச்சினை என்றால் - இல்லை. என் சொத்திற்கான மதிப்பு அதிகம் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் 2021 ல் கிரயம் வாங்கிய கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். அந்த கிரய பத்திரத்தை யார் எழுதிக்கொடுத்தது என்றால் - கல்யாணராமனின் வாரிசுகள் எழுதிக்கொடுத்தார்கள். கல்யாணராமனுக்கு மேற்படி சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் - 1963 ஆவணத்தில் சொல்லியுள்ளார். 23.01.2012 ம் வருடம் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் - பதிவாகியுள்ளது. அதில் நான் தரப்பினர் இல்லை. என்னிடம் காட்டப்படும் **பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.2 ஆகும்**. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள வாசகத்தினை படித்து பார்த்தேனா என்றால் - படித்துப் பார்த்தேன். நான் வாங்கியுள்ள கிரய பத்திரம் எனது வழக்கறிஞர் தயார் செய்த பத்திரம் என்றால் - சரிதான். அவர்தான் எனக்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரய பத்திரத்தில் கண்டுள்ள விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் - நான்தான் சொன்னேன். கிரய பத்திரம் எழுதும்போது 2012 பாகப்பத்திரத்தினை பற்றி சொன்னேனா என்றால் - எனக்கு சம்மந்தம் இல்லை என்பதால் சொல்லவில்லை. எனக்கு கிரயம் செய்துக்கொடுத்த கல்யாணராமனின் தகப்பனார் பெயர் என்னவென்றால் - ராஜாங்க செட்டியார். திருநாவுக்கரசு என்பவர் எனது தந்தை ஆவார். 23.01.2012 ல் ராஜாங்க செட்டியார் மகன்கள் திருநாவுக்கரசு, விஜயகுமார், வீரமணி ஆகியோர்கள் சேர்ந்துதான் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் - சரிதான். எனது தந்தை திருநாவுக்காரசு உயிருடன் உள்ளாரா என்றால் - உயிருடன் உள்ளார். கல்யாணராமனிடம் வாங்கிய சொத்து மற்றும் எனது தந்தை மூலம் கிடைத்த சொத்தில் தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் - இல்லை. கல்யாணராமனிடம் வாங்கி சொத்தில் தான் வீடு கட்டியுள்ளேன். என் தகப்பனார் சொத்தில் வீடு கட்டவில்லை. என் தகப்பனார் தற்போது என்னோடு தான் கூட்டு குடும்பமாக உள்ளார். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு அ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது. ஆ அட்டவணை சொத்து வீரமணிக்கும் இ அட்டவணை சொத்து விஜயகுமாருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் - சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் 7 வது பக்கத்தில் 1963 ஆண்டிற்குரிய பத்திரத்தை பற்றி

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். ஆ அட்டவணையில் கண்டுள்ள சொத்தின்படி திருநாவுக்கரசுக்கு தாய் சுவற்றில் ¾ அடி அகலமும் பிரதிவாதி வீரமணிக்கு ½ அடி அகலமும் ஒதுக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் - சரிதான். அந்த பத்திரமே தவறாகும். மேற்படி பி.வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் - நான் தரப்பினர் இல்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட கிரய பத்திரத்தில் நானும் பத்திரத்தை தயார் செய்த வழக்கறிஞரும் வேண்டுமென்றே உண்மையை மறைத்து 2012 ம் ஆண்டிற்குரிய பாகப்பிரிவினை பத்திரத்தை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் - சரியல்ல. கிரயம் என்றைக்கு செய்யப்பட்டது என்றால் - 31.01.2021 ம் ஆண்டு. அந்த பதிவிற்கு முன்பே பிரதிவாதி அந்த சுவற்றில் பாகம் இருப்பதாக தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் - எனக்கு தெரியாது. பிரதிவாதியின் எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் - படித்து பார்த்தேன். அதில் அறிவிப்கை பற்றி சொல்லியுள்ளார் என்றால் - சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் அனைத்தும் எனக்கும் பிரதிவாதிக்கும் இருக்கக்கூடிய சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் என்றால் - சரியல்ல. அது எனது வீட்டின் புகைப்படங்கள் ஆகும். **புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.3 ஆகும்**. புகைப்படங்கள் 21.03.2021 ம் தேதியன்று எடுக்கப்பட்டது என்றால் - சரிதான். அப்போது நான் அந்த வீட்டினை இடித்துவிடடேன் என்றால் - முகப்பு பகுதியினை மட்டும் இடித்துவிட்டேன். பத்திரம் பதிவு செய்தபின்னர் தான் இடித்தேன். இது சம்மந்தமாக பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரில் என்னை விசாரித்தார்களா என்றால் - விசாரித்தார்கள். நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை கேட்ட மனுவில் , பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றால் - சரிதான். இந்த உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் - இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.21/2021 ல் கண்டுள்ள சொத்துக்கள் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் 30.11.2021 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் - சரிதான். இந்த வழக்கு சொத்தில் எனக்குள்ள உரிமை என்பது 1963 பத்திரத்தில் என்ன உரிமை உள்ளதோ அந்த உரிமை தான் எனக்கு விற்கப்பட்டது என்றாலும் அதனை தாண்டி எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் - சரியல்ல. 2012 ம் ஆண்டு பாகப்பத்திரத்தின் படி தென்வடல் 68.1/2 அகலமும் கிழமேல் ½ அடி ஆக 34.1/2 சதுரடி பிரதிவாதிக்கு உரியது என்றால் - தவறாகும். க.எண். 32 ல் உள்ள வீடும் 33 ல் உள்ள வீடும் ஒரே தாய் சுவற்றில் பொறுத்தி கட்டப்பட்டிருந்தது என்றால் - சரியல்ல. இரண்டு வீட்டின் கூரைகளும் ஒன்றாக பொருத்தி கட்டப்பட்டுள்ளது என்பதை காட்டுவதுதான் பி.வா.ஆ-3 ஆகும் என்றால் - சரியல்ல. அது என்னுடைய வீடு ஆகும். நான் முழு சுவற்றையும் அபகரிக்கவேண்டும்எ ன்ற எண்ணத்தில் எனக்கு வேண்டியவர்களின் துணை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.